## பஸ்கொட பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பஸ்கொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஊருபொக்க விளையாட்டுத் திடலில் நீர் செயற்திட்டம் நிர்மானிக்கும் வேலைக்காக செலுத்தவேண்டியிருந்த செலவை விட ரூபா 102,427 தொகை மிகையாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது நிர்மான வேலை கடன்பட்டோருக்காக ரூபா 56,828 தொகை மிகையாக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 289,641 இற்கான உபகரணங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | முன்வரும் வருடத்திற்கான கேள்வி அழைத்தல் தொடர்பான ரூபா 219,717 இற்கான செலவு மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 7,687,969 தொகைக்கான 03 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 114,369 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங் களை இணக் கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 1,515,535 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்காக நடவடி க்கைகள் எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 178 (7)(2) | தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ரூபா 365,150 இற்கான பெறுமதியுடைய நீர் தொட்டி மற்றும் வீதி விளக்கு | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கேள்விகள் பெட்டியில் போடப்பட்டு இரகசியத் தன்மை பேணப்படும் வகையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகுதிகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்யும் போது இரகசியத் தன்மையை பேணும் விதத்தில் கூறுவிலைகள் பெற்றிருக்கவில்லை. | | கூறுவிலைகள் பெறப்பட்டு கொள்வனவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 6.2.2 | ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக தகைமைகளை அழைக்கும் போது 14 நாட்கள் காலவரையறை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | ஏற்படுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறைப்படி 21 நாட்கள் வழங்கி பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பத்திரிகை அறிவித்தல் ஒன்று பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டு தொடர்பாக சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் 03 இயந்திர உபகரணங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,881,782 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,677,599 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,037,500 | 1,682,285 | 1,678,593 | 99,784 | 1,712,000 | 1,673,275 | 1,674,580 | 96,092 |
| வாடகை | 11,209,000 | 7,938,843 | 10,715,776 | 520,648 | 9,051,000 | 8,206,041 | 9,473,731 | 3,297,581 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,738,200 | 1,377,973 | 1,377,973 | - | 584,650 | 755,167 | 755,167 | - |
| ஏனைய வருமானங்கள் | 15,493,500 | 14,046,755 | 13,143,280 | 17,794,718 | 11,038,000 | 13,492,590 | 12,765,789 | 16,891,243 |
| மொத்தம் | 30,478,200 | 25,045,856 | 26,915,622 | 18,415,150 | 22,385,650 | 24,127,073 | 24,669,267 | 20,284,916 |

### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 96,092 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 25,325 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 121,417 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 21,632 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 99,785 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஏக்கர் வரித்தொகை மற்றும் ஆண்டிற்கான ஏக்கர் வரி என்பவற்றை அறவீடு செய்வதற்காக ஏக்கர் வரி உரிமையாளர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளேன். |

### 2.2.3 சந்தை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 211,488 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 5,606,123 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,817,611 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,606,123 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 211,488 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை ஆரம்பித்துள்ளேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,486,642 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 15,461,870 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பணம் பெற்றுக்கொள்வதற்காக மாகாண சபையின் பிரதான செயலாளர் ஊடாக விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் முறைப்பிரகாரம் மீளளிப்புச் செய்தல் நடைபெற்றிருக்கவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சித் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 1,920,720 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | சரியான தகவல்களை உறுதிப்படுத்திய பின்னர் ஓய்வூதிய பங்களிப்புத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான மிகைப் பணத்தை நிலையான வைப்பு ஒன்றில் வைப்புச் செய்ய முடியும் எனினும், மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கங்கள் மேற்கொண்டிருந்த ரூபா 63,000,000 இற்கான 05 செயற்திட்டங்களை செயற்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகை உட்பட ரூபா 45,243,062 இற்கான நிலையான வைப்பு மீதியொன்று சபையினால் பேணப்பட்டு வந்திருந்தது. | செயற்திட்டங்களை விரைவாக செயற்படுத்த வேண்டும். | சபையின் ஆதனங்களை அபிவிருத்தி செய்யும் போது ஏற்பட்டிருந்த சிக்கல் நிலைமைகள் காரணமாக பணம் ஒதுக்கப்பட்டிருந்த நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டின் போது பாதை அபிவிருத்தி மற்றும் நிர்மான வேலை அலுவல்களுக்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக ரூபா 40,689 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு தகைமைகளை பரிசோதனை செய்வதற்காக அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு மதிப்பீட்டுக் குழு ஒன்று மூலம் தகைமையுடைய ஒப்பந்தக்காரர்கள் 06 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 45,038,163 தொகை மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 92 அபிவிருத்தி செயற்திட்டங்களில் சிலவற்றை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீதிச் செயற்திட்டங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட வேண்டும். | ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததால் திட்டங்களை அமுல் நடத்துவற்கு முடியாமையால் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டங்கள் ஏதும் செயற்படுத்தியிருக்கவில்லை. |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், ஒரு மிகை ஊழியரை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகை பதவியை முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இரண்டாம் தர பதவி வெற்றிடமாக காணப்பட்ட 02 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் தற்போது நிரப்பப்பட்டுள்ளன. ஆரம்ப பதவியில் 18 வெற்றிடங்களுக்காக முறைப்பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் பெற்றதுடன் மீளாய்வாண்டு நவம்பர் 27 திகதி உள்ளூராட்சி ஆணையார் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்றிருந்த 01/06/01 இலக்கங் கொண்ட கடிதத்தின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 43 நிறுவனங்களில் இருந்து சுற்றாடலுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும் அதற்காக ஒழுங்குபடுத்தல் கட்டணம் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 301,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தகைமைகளை பரிசோதனை செய்து விரைவாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பலகைகள் பொருத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 1,480,795 தொகை செலுத்தியிருந்த போதிலும் விவரக்குறிப்பு, மதிப்பீடு, தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கை மற்றும் பொருத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் உரிய நியமத்தின் படி பொருத்தப்பட்டுள்ளன என தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தரின் அறிக்கை பெற்றிருக்கவில்லை. | அனைத்து அறிவித்தல் பலகைகளையும் பொறுத்தும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகளுக்காக பில் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்வேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் மேலும் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகளை தேசிய கணக்காய்வு உப அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வேன். |